# ஆண்டறிக்கை

# 2024

1990 சுவசெரிய மன்றம

## பொருளடக்கம்

1. செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள் .......... 2
2. நிறுவனத் தகவல்கள் .......... 3
3. தலைவர் அவர்களின் செய்தி.......... 5
4. இயக்குனர்களின் சுருக்கமான விவரக்குறிப்பு.......... 6
5. தலைமை நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை .......... 9
6. நிறுவனத்தின் நிருவாக அறிக்கை.......... 10
7. கணக்காய்வு குழு அறிக்கை .......... 11
8. தொழிற்பாடு செயற்பாடுகள் .......... 13
9. நிதிசார் செயல்திறன .......... 22

**1. செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்**

**1990** சுவசெரிய மன்றம்யின் செயற்பணி, தொலைநோக்கு மற்றும் குறிக்கோள், ***"உயிரை காப்பாற்றுதல்".*** என்ற ஒரே குறிக்கோளை மட்டும் முதன்மையாகக்கொண்டு தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் எந்தவொரு அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் என்பவற்றால் மேலும், எத்தகைய எண்ணிக்கையிலான உயிர்களைப் பாதுகாக்க முடியுமென்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகிறது.



**2. நிறுவனத் தகவல்கள்**

## சட்டத்துடனான கட்டமைவு

சுவசெரிய மன்றம் தாபிக்கப்படுவதற்கான வர்த்தமானிப் பத்திரம் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு, 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க 1990 சுவசெரிய மன்றம் சட்டமாக வலுவூட்டப்பட்டது.

## பதிவு அலுவலகம்

இலக்கம். 415, கோட்டை வீதி, ராஜகிரிய, இலங்கை.

## இயக்குனர் குழு

***நியமனம் பெற்ற இயக்குனர்கள்***

**03.01.2025 முதல் 3 ஆண்டு காலம் (2025 - 2028)**

திரு. நிரோ'ன் ரத்நாயக்க - தலைவர்

டாக்டர் அருண பாலித சம்பத்

திரு. நலின் ஆர் பெரேரா

திரு. ெர்வின் அரசகுலரத்ன

**08.08.2024 அன்று முடிவடைந்த 3 ஆண்டு காலம் (2021-2024), மற்றும் காலம் 11.08.2024-31.12.2024**

திரு. துமிந்திர ரத்நாயக்க – கூட்டத்தலைவர்

திருமதி. சந்தியா சல்காது

பேராசிரியர். அசித த சில்வா

திரு. விஷ் கோவிந்தசாமி

***பிரதிநிதியாளர்கள்***

பதவிவழி நியமனம் பெற்ற நிதி அமைச்சு செயலாளரின் பிரதிநிதியாளர :

திரு. ஏ. பி. குரும்பலாபிட்டிய (2024.11.26 வரை)

திரு. தரிந்து காரியவசம் (26.11.2024 முதல்)

பதவிவழி நியமனம் பெற்ற சுகாதார அமைச்சு செயலாளரின் பிரதிநிதியாளர் :

வைத்தியர். சுனில் த அல்விஸ் (2024.08.26 வரை)

பதவிவழி நியமனம் பெற்ற பொலிஸ் மா அதிபரின் துணை பிரதிநிதியாளர் :

DIG திரு. இந்திக ஹபுகொட

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம்

## வங்கிகள்

இலங்கை வங்கி, நிறுவனக் கிளை

## தலைமை முகாமைத்துவ பதவியணி

| | | |
|---|---|---|
| பிரதான நிறைவேற்றலுவலர் | : | திரு. சொஹான் த சில்வா |
| பிரதான மருத்துவ அலுவலர் | : | வைத்தியர். ஸ்ரீலால் த சில்வா |
| மனித வளங்கள் மற்றும் நிருவாக தலைவர் | : | திரு. சாமர டி அல்விஸ் |
| பயிற்சி மற்றும் இணைப்பு தலைவர் | : | திரு. கயான் சத்துரங்க |
| அவசர கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டு நிலைய (ECCC) தலைவர் | : | திரு. மிராஜ் விஜேசேகர |
| நிதி மற்றும் விநியோக சங்கிலி முகாமையாளர்கள் | : | திரு .அஷான் பெரேரா |
| செயல்பாட்டு முகாமையாளர் | : | திரு. சசிரு ரத்நாயக |
| வாகன பராமரிப்பு முகாமையாளர் | : | திரு. ரோஹன வீரசிங்க |
| தர முகாமையாளர் | : | திரு.ருவான் குமாராசிரி |
| பயிற்சி மற்றும் நெறிமுறை முகாமையாளர்கள் | : | திரு. ஸ்டானோசன் செல்வராஜா |
| நிர்வாகம் மற்றும் நிறுவன சேவைகள முகாமையாளர்கள் | : | திருமதி. ரஷிகா ரொட்ரிகோ |
| பிராந்திய முகாமையாளர்கள் | : | திரு. காமிணி குமார, திரு. K.தவகாந்தன் |

## 3. தலைவர் அவர்களின் செய்தி

1990 சுவ செரிய மன்றத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையை, புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுவின் தலைவராக, சமர்ப்பிப்பதை நான் மிகவும் பெருமையாகக் கருதுகிறேன்.

முன்னாள் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர்கள், 1990 சுவ செரிய அவசர ஆம்புலன்ஸ் சேவையை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உயர்தர மருத்துவமனைக்கு முந்தைய சேவையை உருவாக்குவதற்காக, புதுமையான தொழில்நுட்பங்களைச் சேர்த்து மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்காக, எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டி தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் கடமைகளை இரவும் பகலும் தடை இல்லாமல் செய்துசெய்யும் எங்கள் அலுவலகம் மற்றும் களப்பணியாளர்கள்-அவர்களின் தொடர் அர்ப்பணிப்பு, உற்சாகம் மற்றும் சேவைத்திறனுக்காக எனது உள்ளங்கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2024 ஆம் ஆண்டில், கடுமையான தேசிய பொருளாதார நெருக்கடி மற்றும் மனிதவள பற்றாக்குறை உள்ளிட்ட சவால்கள் இருந்தபோதிலும், **"உயிரைக் காப்பாற்றுங்கள்"** என்ற எங்கள் பணி நோக்கத்தின் கீழ், 1990 சுவ செரிய மன்றத்தின் சேவைகள் இடையறாது முன்னேற்றம் கண்டுள்ளன. கடந்த ஆண்டு நாடளாவியமாக 2 மில்லியனுக்கும் மேற்பட்ட அவசர மருத்துவ அழைப்புகளுக்கு பதிலளித்துள்ளோம் என்பது ஒரு முக்கிய மைல்கல்லாகும். இது, எங்கள் சேவைகள் நாட்டின் மக்களிடையே நிலையான மரியாதையும் நம்பிக்கையும் பெற்றிருப்பதைக் காட்டுகிறது.

அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களுக்கான (நுஆவுள) டிப்ளோமா பயிற்சித் திட்டம், களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்துடன் இணைந்து தொடங்கப்பட்டு, எங்கள் ஊழியர்களின் திறமைகளையும் மேம்படுத்தியுள்ளது. இதன் மூலம், நாம் ஒரு திறமையான, முறையான மற்றும் மீள்தன்மை கொண்ட அவசர பதிலளிக்கும் அமைப்பை கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

மேலும், இந்த ஆண்டு உலக வங்கி, 1990 சுவ செரிய சேவையை, ஒரு பயனுள்ள மற்றும் பதிலளிக்கக்கூடிய பொது சேவையாக அங்கீகரித்துள்ளது. இந்த அங்கீகாரம், எங்கள் ஊழியர்களின் முழுமையான அர்ப்பணிப்புக்கும், ஒழுங்கான நிர்வாகத்துக்கும் கிடைத்துள்ள அங்கீகாரமாகும். இது ஒரு அரச நிறுவனமாக, எங்களுக்கு வழங்கப்பட்டது மிக முக்கியமான பாராட்டாகும். தொலைநோக்கு தலைமைத்துவம் மற்றும் உறுதியான நிர்வாகத்துடன் கூடிய மன்றத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைமை நிர்வாக அதிகாரியின் பங்களிப்பும் இங்கு சிறப்பாக உள்ளது குறிப்பிட வேண்டியதாகும். அவருக்கான எனது மரியாதையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"உயிரைக் காப்பாற்றுங்கள்"** என்ற எங்கள் பிரதான இலக்கை கொண்டு, நாட்டின் மக்களுக்கு மேலும் பயனளிக்கும் வகையில், 1990 சுவ செரிய தேசிய அவசர ஆம்புலன்ஸ் சேவையை விரிவுபடுத்தும் பணியில், புதிய தலைமையின் கீழ் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து முன்னேறுவோம் என்ற நம்பிக்கையுடன் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

**1990 சுவ செரிய மன்றம்**

கையெழுத்து தெளிவாக இல்லை
**நிரோ'ன் ரத்நாயக்க**
**தலைவர்**

## 4. இயக்குனர்களின் சுருக்கமான விவரக்குறிப்பு

### தீரு. நீரேர்'ன் ருத்நுர்யுக்கு

மேஜர் (ஓய்வு) நிரோ'ன் ரத்நாயக்க, 1994 முதல் 2019 வரை நீடித்த குறிப்பிடத்தக்க சேவைக்காலத்துடன் இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய, மிகுந்த அனுபவம் மற்றும் விருதுகள் பெற்ற ஓய்வுபெற்ற அதிகாரியாவார். படை செயல்பாடுகள் மற்றும் இராணுவ உளவுத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர். இவரது சேவையில் பல முக்கிய கட்டளைக் கடமைகள் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை வகித்துள்ளார் அதில் பிளட்டூன் கட்டளைதலைவர், கம்பெனி கட்டளைதலைவர் மற்றும் பிரிகேட் மேஜர் ஆகியவை அடங்கும். இவர் உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். வன்னி மனிதாபிமான போர் நடவடிக்கைகளின் போது காண்பித்த வீரம் மற்றும் தலைசிறந்த சேவைக்காக, வீர விக்ரம விபூ'ணய (ஙுறுஏ), ரண விக்ரம பதக்கம (சுறூ), மற்றும் ரண சூர பதக்கம (சுளூ) ஆகிய உயர் அரச விருதுகளைப் பெற்றுள்ளார். இராணுவ சேவையின் பின்னர், தனியார் பாதுகாப்புத் துறையில் தலைமைப் பொறுப்புகளை ஆற்றியுள்ளார்.

### ஐவுத்தீயுரு் ஆருணு புர்லீது சும்புத்

னுச. யுசரயெ வைத்தியர் அருண பாலித சம்பத் ஒரு அனுபவமிக்க மருத்துவ நிபுணராக தற்போது கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் பணியாற்றுகிறார். 2004 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து அவர் தனது ஆ.டீ.டீ.ளு பட்டத்தை பெற்றார். அதன் பின்னர், இவர் நெ.்.ப்ராலஜி (சிறுநீரக வைத்தியம்), பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பிரிவு நிர்வாகம் உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளை அரச மருத்துவத் துறையில் வகித்துள்ளார். 20 ஆண்டுகளுக்கும் மேலான சேவைக் காலத்தைக் கொண்ட இவர், தொழில் நலன் மற்றும் பாதுகாப்புக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும், சுகாதார சேவையின் தரம் மற்றும் பாதுகாப்புக்கான ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கோவிட்-19 பேரிடரின் போது, மாவட்ட அளவில் நோயாளர் போக்குவரத்து, சோதனை மற்றும் தடுப்பூசி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் அவர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

### தீரு நுலீன் ஆரு். பேுரேுர்

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அறிவியல் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டமும் (டுடுடீ) பெற்று, 19 ஆண்டுகளுக்கும் மேலாக பிரபலமான சட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள திரு நலின் ஆர். பெரேரா, வழக்கறிஞராக சிறந்த அனுபவமும் சாதனைகளும் கொண்டவர். வழக்குத் தீர்ப்பு, சட்ட ஆலோசனை மற்றும் ஆலோசனை சேவைகளில் அனுபவம் வாய்ந்த இவர், 12,000 க்கும் மேற்பட்ட ஆவணங்களை தயாரித்த திறமையான நொட்டாரி அதிகாரியாகவும், ஆணையர் பதவியிலும் (ஊழஅஅளைளழைநெச கழச ழுயவாள) பணியாற்றுகிறார். தொழிலாளர் சட்டம், நிறுவன சட்டம் மற்றும் ஒழுங்குமுறை பூர்த்தி உள்ளிட்ட பிரிவுகளில் அவரது நிபுணத்துவம், அவரை பிரபலமான மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு, குறிப்பாக பிராந்திய அபிவிருத்தி வங்கி (சுனுடீ) உள்ளிட்ட நிறுவனங்களுக்கு நம்பகமான சட்ட ஆலோசகராக மாற்றியுள்ளது.

### தீரு ெ'ர்வீன் ஆருசுகுலுருத்னு

திரு ெ'ர்வின் அரசகுலரத்ன, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வர்த்தகத்துறையில் கௌரவ பட்டம் (Bachelor of Commerce - Honors) பெற்றுள்ளார். நிறுவனத்துறையில் (Cooperate Sector) அவர் ஜப்பானின் ஒசாகாவில் உள்ள Garbo Corporation நிர்வாகியாகவும், GARTEX Industries Lanka (Pvt) Ltd இல் செயல்திறன் இயக்குநராகவும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். திரு அரசகுலரத்ன தற்போது Ruchi Clothing (Pvt) Ltd நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக பணியாற்றி வருகின்றார்.

## திரு. துமிந்திர ரத்நாயக்க

திரு. துமிந்திர ரத்நாயக்க விஞ்ஞான இளங்கலை (இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல்) பட்டம் பெற்றவர், மேலும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவும் உள்ளார். அவர் செல்டெல்/டீகோ மற்றும் எடிசலாட் என்பவற்றின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், தனியார் நிறுவனங்களினது இயக்குனர் குழுக்களிலும் பல பதவிகளையும் வகிக்கின்றார். இதற்கு மேலதிகமாக அவர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ICTA இயக்குனர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளதுடன், இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் பதவியும் வகித்துள்ளார். 2018 ஆம் ஆண்டில் திரு.துமிந்திர 1990 சுவசெரிய மன்றம்யின் ஆரம்ப தலைவராக நியமனம் பெற்றதுடன், தற்போது நாட்டின் மிக வினைத்திறனுடன் பராமரிக்கும் அரச அமைப்பாக சுவசெரியவின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாடுகளை அவரால் வழிநடாத்தப்படுகிறது.

## வித்யா ஜோதி பேராசிரயிர். அசித்த த சில்வா

பேராசிரியர் அசித்த வடக்கு கொழும்பு மருத்துவக் கல்லூரயில் மருத்துவ பட்டம் பெற்றுள்ளதுடன், ஒக்ஸ்பர்ட் ரெட்க்ளிப் மருத்துவமனையில் க்ளினிக் மருந்தியல் துறையில் முதுகலைப் பயிற்சியையும் பெற்றுள்ளார். பேராசிரியர் அசித்த களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மருத்துவ மருந்தாளரும், மருந்தியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியரும் ஆவதுடன், களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பரிசோதனைப் பிரிவின் இயக்குனரும் ஆவார். அவர் லண்டனின் ரோயல் மருத்துவ கல்லூரியின் உறுப்பினராவார். அவர் நேற நுபெடயனெ துழரசயெட ழக ஆநனைஉைநெஇ டியஉெநவஇ துயுஆயுஇ ஊடைைஉயட ளுஉைநெஉந யனெ ளுவசழமந மற்றும் ீடுழள ஆநனைஉைநெ போன்ற பல அறிவியல் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டில், அறிவியலுக்கான அவரது மதிப்புமிக்க பங்களிப்பிற்காக பேராசிரியர் அசித்தவுக்கு தேசிய கௌரவ வித்யா ஜோதி விருது வழங்கப்பட்டது.

## திருமதி சந்தியா சல்காது

திருமதி சந்தியா, களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் எடித் கோவன் பல்கலைக்கழகத்தில் முதுகலை வியாபார நிர்வாகப் பட்டத்தையும் (ஆடீயு) (சர்வதேசம்) பெற்றுள்ளார். மேலும் ஐக்கிய இராச்சயத்தின் (ருமு) பட்டயம் பெற்ற சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (ஆஊஐஆ) உறுப்பினராகவும் உள்ளார். ழுபடைஎல யுஉவழைெ இல் இயக்குனர்/தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ள திருமதி சந்தியா, உலக வங்கியின் நிதியுதவியுடன் இலங்கையில் பல திட்டங்களுக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய அனுபவமிக்க தகவல் தொடர்பு நிபுணர் மற்றும் வர்த்தக ஆலோசகர் ஆவார். 2018/19 இல் றுழஅநெ ைெ ஆயயெபநஅநவெஇ ஐகுஊ மற்றும் யுரளவசயடயைெ யுனை ஆகியவற்றால் வழங்கப்பட்ட ''றுழஅயெ ழக ஐைெளைசயவழைெ" உள்ளிட்ட பெரும்பாலான பதவிப் பெயர்களில் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார். தற்போது, அவர் இலங்கையில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (ருNகுPயு) /சுகாதார அமைச்சின் ஆலோசகராக பணியாற்றுகிறார்.

## திரு. விஷ் கொவிந்தசாமி

திரு. விஷ் அவர்களால் மின் பொறியியல் தொடர்பான அறிவியல் இயங்கலை பட்டப்படிப்பு மற்றும் அமெரிக்க ஐக்கிய குடியரசின் ர்யசவகழசன பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாக முதுகலை பட்டம் (ஆடீயு) பெற்றுள்ளார். இலங்கை வர்த்தக சபையின் தலைவர், இலங்கை தொழில்தருநர் சம்மேளனம், இலங்கையின் இயக்குனர் சபை உறுப்பினர், வர்த்தக சேவை சேமலாப நிதியத்தின் குழு உறுப்பினர், இலங்கை மருந்து கைத்தொழில் சபையின் முன்னாள் தலைவர் என்ற வகையில் வர்த்தக துறையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். கைத்தொழில் துறையில் இந்து- இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவரும் ஆவார். தற்போது விஷ் அவர்கள் சன்ஸயின் ஹோல்டிங்ஸ் பீ.எல்.சீ. (CSE:SUN), வட்டவல பெருந்தோட்டக் கம்பெனி, வட்டவல பால் உற்பத்தி கம்பெனி, சன்ஷயின் வில்மா தனியார் கம்பெனி, டாஜ் லங்கா ஹோடேல்ஸ் மற்றும் சொப்ட்லொஜிக் ஆயுட் காப்புறுதி கம்பெனியின் இயக்குனர்/தலைவர் போன்ற பதவிகளை வகிக்கின்றார்.

## தீரு துரீந்து குர்ரீயுவுசும்

திரு தரிந்து காரியவசம் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் இலங்கை நிர்வாக சேவை (SLAS) அதிகாரியாவார். அவர் பொது நிர்வாகத்தில் ஒரு தசாப்தத்துக்கும் மேற்பட்ட அனுபவத்தை பெற்றவர். தற்போது, அவர் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் துணை இயக்குநராக பணியாற்றி வருகிறார், அங்கு இலங்கையின் சர்வதேச நிதியூட்டம் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பை மேலாண்மை செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறார். இதற்கு முன்னர், அவர் நிலத்துறை அமைச்சில் துணை ஆணையரும் உதவி நில ஆணையரும் உள்ளிட்ட உயர் பதவிகளில் பணியாற்றியுள்ளார். திரு கரியவசம் கெலணிய பல்கலைக்கழகத்திலிருந்து டீளுஉ (அகிமா) பட்டத்தை பெற்றுள்ளார் மற்றும் ஊஐஆயு இறுதி பரீட்சையில் தேர்ச்சி பெற்றவராக உள்ளார். மேலும், அவர் சர்வதேச தொடர்புகள் மற்றும் பொது கொள்முதல் துறைகளில் டிப்ளோமாக்களையும் பெற்றுள்ளார். இவை அவரது ஆளுமை, பொது கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான திறன்களை மேம்படுத்தியுள்ளன.

## பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. இந்திக்க ஹப்புகொட

திரு. இந்திக்க அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள ஏனைய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுக்கிடையில் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவளை கல்லூரியில் வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான வியாபார நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டமும் (MBA) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் குற்றவியல் தொடர்பான டிப்ளோமாவும் பெற்றுள்ளார். 1998 ஆம் ஆண்டில் உப பொலிஸ் பரிசோதகராக இலங்கை பொலிஸ் திணைக்களத்திடம் சேர்ந்த திரு.இந்திக 2021 ஆம் ஆண்டில் பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியில் நியமனம் பெற்றதன் பின்னர், தற்போது போக்குவரத்து நிருவாகம் மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுகின்றார். அவர் 2008-2010 தொடக்கம் கிழக்கு டிமோரில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையில் கடமைகளை மேற்கொண்டுள்ளார். அவர் இந்தியா, சீனா, தாயிலாந்து, வியட்நாம், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றியுள்ளார்.

## மருத்துவர் சுனில் த அல்விஸ்

மருத்துவர் சுனில் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மருத்துவ இயங்கலை மற்றும் சத்திரசிகிச்சை தொடர்பான பட்டப்படிப்பு முடித்துள்ளதுடன், அவர் விஞ்ஞான முதுகலை (சமூக மருத்துவவியல்), மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி பட்டம் (மருத்துவ நிருவாகம்) பெற்றுள்ளார். அவர் களனிய பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாகம் தொடர்பான முதுகலை பட்டமும், வயம்ப பல்கலைக்கழகத்தில் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமாவும் பெற்றுள்ளார். மருத்துவர் திரு.சுனில் மருத்துவ அலுவலராக பணியாற்றியுள்ளதுடன், 1997 ஆம் ஆண்டில் மருத்துவ அதிகாரியாக தரமுயர்வு பெற்று மருத்துவ நிருவாக சேவையில் சேர்ந்துள்ளார். அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு வடமேல் மாகாண சுகாதார சேவை மாகாண இயக்குனராக தரமுயர்வு பெற்று 2012 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் சுகாதாரம், போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ பிரதி இயக்குனராக நியமனம் பெற்றார். தற்போது மருத்துவர் திரு.சுனில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராக (மருத்துவ சேவை) கடமையாற்றுகின்றார்.

## தீரு ஏ. பீ. குறுும்புலுபீடீயு

திரு அருண பிரியதர்ச குரும்பலபிடிய இலங்கை அரசு துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலான சேவை அனுபவம் கொண்ட சிறந்த பொது நிதி மற்றும் மேலாண்மை கணக்குப் பரிசோதனை நிபுணராவார். தற்போது, அவர் மேலாண்மை கணக்குப் பரிசோதனைத் துறையின் இயக்குநர் பொறுப்பில் உள்ளார். திரு குரும்பலபிடியாவுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து பொருளியல் முதுநிலை பட்டம் (Master of Economics), பொது நிர்வாகத்தில் விஞ்ஞான பட்டம் (BSc) மற்றும் ஊயு இலங்கை மற்றும் APFA உறுப்பினர் அடங்கிய பல தொழில்முறை தகுதிகள் உள்ளன. அவருடைய நிபுணத்துவத்தில் நிதி மேலாண்மை, திட்டமிடல், ஆபத்து மதிப்பீடு மற்றும் முக்கிய அரசாங்க நிறுவனங்களில் கணக்கீட்டு தரநிலைகளை செயல்படுத்துதல் அடங்கும். மேலும், அவர் பல தேசிய அமைப்புகளின் பணியாணையில் பணியாற்றி, அரசுப் பகுதியின் நிதி ஆளுமையில் முக்கிய பங்களிப்பு வழங்கியுள்ளார்.

## 5. தலைமை நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை

2024ஆம் ஆண்டை நினைவுகூரும் இந்நேரத்தில், 1990 சுவ செரிய மன்றம் இலங்கையின் சுகாதார அமைப்பில், துணிச்சல்மிக்க தாங்கும் சக்தியின் அடையாளமாகவும், சேவையுமாக தொடர்ந்தும் திகழ்கிறது. இந்த ஆண்டு நிதிச் சிரமங்கள், பணியாளர்கள் ஆட்சேர்ப்பு சவால்கள் மற்றும் எங்கள் சேவைகளுக்கான அதிகரித்த தேவைகள் ஆகியவற்றால் எங்களது சகிப்புத்தன்மை மீண்டும் ஒரு முறை பரீட்சிக்கப்பட்டது. இருப்பினும், எங்கள் அணிகளின் அர்ப்பணிப்பின் காரணமாக, உலகிலேயே மிகுந்த டிஜிட்டல் மேம்பாட்டுடன் கூடிய, அதிவேக மற்றும் இலவச ஆம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக உலக வங்கியால் பாராட்டப்பட்டுள்ளோம்.

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடைபெற்று வரும் அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர் (EMT) பயிற்சி திட்டம் மற்றும் "ஒரு ஆம்புலன்ஸை தத்தெடுத்தல்" (Adopt an Ambulance) பிரச்சாரம் ஆகிய முக்கிய முயற்சிகள் எங்கள் திறனை விரிவுபடுத்த முக்கிய பங்கு வகித்துள்ளன. மேலும், இங்கிலாந்தின் Buckinghamshire New University உடனான சமீபத்திய ஒத்துழைப்பு, கூட்டு ஆராய்ச்சி, மருத்துவ நவீனத்துவம் மற்றும் முன்னணி அவசர சிகிச்சை நிறுவனங்களுடன் தாக்கம் வாய்ந்த கூட்டாண்மைகள் உருவாக்கும் வாய்ப்புகளைத் தருகிறது. இந்த முயற்சிகள் நிலைத்துவம் வாய்ந்த மருத்துவமனைக்கு முன்னதான அவசர ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்துவதற்கான எங்களது முனைப்பையும் உறுதியையும் பிரதிபலிக்கின்றன.

எங்கள் சிறப்பான பணியாளர்களின் தொழில்முறைத்தன்மை மற்றும் பரிவும் இந்த சேவையின் அடித்தளமாக உள்ளன; அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன். எங்களது தன்னலமற்ற பணிக்கு, புதியதாக நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இயக்குனர்கள், வழங்கும் புதிய வழிகாட்டலுக்கும் அர்ப்பணிப்பிற்கும் என் நன்றி. அதே நேரத்தில், எங்கள் முந்தைய தலைவர் திரு. துமிந்திர ரத்நாயக்க மற்றும் முன்னாள் இயக்குனர் சபையின் பார்வையும் வழிகாட்டலும் எங்களது தற்போதைய வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தமைக்கு என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒற்றுமை, புதிய சிந்தனைகள் மற்றும் உறுதியுடன், இலங்கை முழுவதும் அவசர சிகிச்சை சேவைகளை மேம்படுத்தவும், உயிர்களை பாதுகாக்கவும் தொடர்ந்து முயற்சிப்போம்.

**1990 சுவ செரிய மன்றம்**

கையெழுத்து தெளிவாக இல்லை

**சொஹான் டி சில்வா**
**முதன்மை செயல் அதிகாரி**

**தலைமை நிறைவேற்று அதிகாரியின் விவரக் குறிப்புகள்**

திரு. சொஹான் த சில்வா 1990 முதல் சுவசெரிய மன்றம்யின் முதலாவது மற்றும் தற்போதைய தலைமை நிர்வாக அதிகாரி ஆவார். உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், திரு. சொஹான் த சில்வா டிஜிரல் மாற்றம் அத்துடன், தொழில்நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுதல், செயற்பாடுகளின் முகாமைத்துவம் மற்றும் தொழில்பாட்டு முகாமைத்துவம் போன்றவற்றில் நிபுணர் ஆவார். 2018 ஆம் ஆண்டில் அவர் 1990 சுவசெரிய மன்றம்யின் பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற பதவியில் அடியெடுத்து வைத்தார். அவர் மென்பொருள் பொறியியலில் இளங்கலை அறிவியல் (சிறப்பு) மற்றும் ஆஸ்திரேலியாவில் வியாபார நிர்வாகம் தொடர்பான முதுகலை (ஆடீயு) பட்டம் பெற்றுள்ளார். அவசர மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய தொழில்நுட்ப முன்னேற்றத்தை இணைக்கும் அவரது ஆர்வம் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் கனடா மற்றும் அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற நிறுவனங்களில் இடர் முகாமைத்துவம் தொடர்பான பல தகுதிகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. திரு. சொஹான் த சில்வா பிரித்தானியா கணினி சங்கத்தில் மற்றும் அவசர சந்தர்ப்ப முகாமைத்துவம் தொடர்பான கைத்தொழில்களை அடிப்படையாகக்கொண்டு பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

6. நிறுவனத்தின் நிருவாக அறிக்கை

## இயக்குநர்கள் குழு

1990 சுவ செரிய மன்றம்யின் செயற்பாடுகள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பன முகாமைத்துவ இயக்குனர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1990 சுவசெரிய மன்றம்யின் இயக்குநர்கள் குழு அர்ப்பணிப்புடன் கூடிய நபர்களை கொண்டமைந்துள்ளது. இக்குழுவானது ஏழு உறுப்பினர்கள் அதாவது, சுகாதார அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தி பதவிவழியில் நியமனம் பெறுகின்ற மூன்று உறுப்பினர்களையும், மருத்துவவியல், மருத்துக்களின் வைத்திய தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம், நிருவாகம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் கல்வி அல்லது தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள, அனுபவம் வாய்ந்த சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்படுகின்ற மேலும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது. இந்த உறுப்பினர்கள், 2018 ஆம் ஆண்டில் சுவ செரிய மன்றம்யின் ஆரம்பம் தொடக்கம் நாட்டில் சிறந்த சேவை வழங்கும் நிறுவனமாக்குவதற்கு தேவையான வழிகாட்டல், ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கி கௌரவமானதும் ஆற்றலுடன் கூடியதுமான சேவையை இயக்குநர்கள் குழு வழங்குகின்றனர். தேவைக்கமைவாக ஒழுங்கமைக்கப்படும் எந்தவொரு மேலதிக சிறப்பு கூட்டங்களுடன், சபை ஒருமாத கால இடைவெளியில் கூட்டங்களை நடாத்துவதுடன், மீளாய்விற்கான காலப்பகுதியில் பத்து கூட்டகள் நடைபெற்றுள்ளன.

## கணக்காய்வு குழு கூட்டங்கள்

"நல்லாட்சிக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்" மற்றும் அரச நிதி சுற்றறிக்கையின் கணக்காய்வு குழு தாபிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு குழுவானது, சுவ செரிய மன்றம்யால் நியமனம் செய்வதுடன், சுவ செரிய மன்றம்யின் மூன்று இயக்குனர்களைக் கொண்டமைந்திருக்கும் நிதி அமைச்சினால் நியமிக்கப்படடவரே இயக்குனர்கள் குழுவின் தலைவராக பணியாற்றுவார். கணக்காய்வு குழு சுயாதீனமாக சுவ செரிய மன்றம்யின் செயற்பாடுகளை பரிசோதனைக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்கின்றது. மீளாய்விற்கான காலபகுதியில் மூன்று குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை 11-12 ஆவது பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## உள்ளக கட்டுப்பாடு

மன்றம்யின் அனைத்து செயல்பாடுகளும் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்டவை என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்கட்டுப்பாட்டு முறையை மன்றம் பராமரிப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு இயக்குனர்கள் குழுவிற்கு உள்ளது. செயல்பாட்டு நிறுவன அமைப்பானது, மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், நிதி மற்றும் ளுஊஆ, நுஊஊஊ, செயல்பாட்டுத் துறை, வாகனம் மற்றும் வாகன பராமரிப்பு துறை, பயிற்சி மற்றும் நெறிமுறை மற்றும் தரம் ஆகிய வடிவமைக்கப்பட்ட பிரிவுகளுக்கான வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளுடன் செயல்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு துறையின் தலைவர்களும் நேரடியாக மன்றம்யின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு அறிக்கை செய்கிறார்கள்

## 7. கணக்காய்வு குழு அறிக்கை

கணக்காய்வு குழு அத்தியாவசியமாக நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக, வெளியக கணக்காய்வு பணிகள் போன்ற துறைகளில், முகாமைத்துவ சபையிடம் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மூலோபாய கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுகின்ற குழுவாகும். கணக்காய்வு குழுவின் தலைமைத்துவம் இயக்குனர் ஒருவர் மேற்கொள்வதுடன், மேலும் இயக்குனர்கள்ஒ இரண்டு பேர்களும் அடங்குவார்கள். குழுவிடம் சிரேட்ட உதவி பதவியணியிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கப்பெறுவதுடன், குழுவின் கடமைகளை பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு போதியளவு நிதி மற்றும் கணக்காய்வு நிபுணத்துவம் உள்ளது.

**கணக்காய்வு குழுவின் கடமைப்பொறுப்புகள்**

**கணக்காய்வு குழு சாசனம்**

பொது தொழில்முயற்சிகள் கணக்காய்வு குழுக்கள், பொது திறைசேரியால் வழங்கப்படுகின்ற 01.‥2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் மூலம் நிருவகிக்கப்படுகிறது.

**பிரதான பணி**

கணக்காய்வு குழு அடிப்படையில் சுவ செரிய மன்றம்யின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் மற்றும் தொழில்பாடுகள் தொடர்பாக சுயாதீன மற்றும் சாட்சிகளின் ஆய்வினை வழங்கியதன் பின்னர், சபையிடம் அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மீது கவனம் செலுத்துகின்றது.

**குழுவின் கூட்டங்கள்**

31.12.2023 முடிவடைந்த ஆண்டில், குழுவின் மூன்று (03) கூட்டங்கள் நடைபெற்றன. குழு கூட்டங்களின் நிமிடங்கள் பதிவு செய்யப்பட்டு, இயக்குநா்கள் குழுவுக்கு சமா்ப்பிக்கப்பட்டது. கணக்காய்வாளா் நாயகத்தின் பிரதிநிதியாக கணக்காய்வு மேற்பாா்வையாளா் கூட்டங்களில் பங்குகொண்டாா். மன்றத்திற்கு பொறுப்பான அமைச்சின் தலைமை கணக்காய்வாளா், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொண்டாா்.

2024 ஆம் ஆண்டுக்குள் குழுவின் அமைப்பு மாறியது மற்றும் 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் குழு உறுப்பினர்களின் வருகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| இயக்குனரின் பெயர் | குழுவின் வகிப்பாகம் | பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. ஏ. பி. குரும்பலாபிட்டிய | தலைவா் | 2/2 (2024.11.26 வரை) |
| திரு. தரிந்து காரியவசம் | | 0/0 (கசழஅ 26.11.2024) |
| மருத்துவர் சுனில் த அல்விஸ் | தலைவா் / உறுப்பினா் | 2/2 (2024.08.26 வரை) |
| திருமதி சந்தியா சல்காது | உறுப்பினர் | 2/3 (2024.12.31 வரை) |

2024 ஆம் ஆண்டில் குழு;

- 2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளா் நாயகத்தின் நிா்வாகக் கடிதங்களை மதிப்பாய்வு செய்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிா்வாக முடிவுகள் ஆகியவற்றுக்கு இணங்காத, குறைபாடுகளை சரிசெய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, கணக்காய்வு வினவல்களுக்கு சமா்ப்பிக்கப்பட்ட பதில்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

- டிசம்பர் 31, 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிநிலை அறிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது மற்றும் கணக்காய்வு கண்காணிப்பாளர், நிதிநிலை அறிக்கைகளை இயக்குநர்கள் குழுவிற்கு வழங்குவதற்கு முன்பு கணக்காய்வு மற்றும் மேலாண்மைக் குழுவிற்கு வழங்குவது சிறந்தது என்றாலும், கால வரம்புடன் அது நடைமுறைக்கு ஏற்றதல்ல என்று குறிப்பிட்டார்.

- பொது திறைசேரியிலிந்து பெற வேண்டிய ரூ. 330 மில்லியன் பற்றி விவாதிக்கப்பட்டு, தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு மீண்டும் கடிதம் எழுதி, இந்தப் பெறத்தக்க தொகையைப் பெறுவதற்கோ அல்லது நிதிநிலை அறிக்கைகளிலிருந்து நீக்குவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்க அவர்களின் முடிவைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டிற்கான  உள்ளக கணக்காய்வு அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது மற்றும் தலைமை உள்ளக கணக்காய்வாளா், மன்றம் வழங்கிய அனைத்து பதில்களையும் ஏற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டார்.

- 1990 சுவ செரிய மன்றத்தின் ஊழியர்களின் ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. முன்றத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் சுகாதார அமைச்சின் திட்டத்திற்கு அப்பால் செல்லக்கூடாது என்பதற்காக கூடுதல் நேர வேலைத் திட்டத்தைத் தயாரித்து ஒப்புதல் பெற முடிவு செய்யப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு குறித்து விவாதிக்கப்பட்டு, அதற்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**வெளியக கணக்காய்வு**

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியை வெளியக கணக்காய்வாளராக நியமனம் செய்யப்பட்டது. கணக்காய்வாளர் அதிபதியால் நியமனம் செய்யப்பட்ட கணக்காய்வாளர் அதிகாரி மற்றும் அவரது பதவியணி, சுவ செரிய மன்றம்யின் வெளியக கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்கின்றார்.

**முடிவு**

கணக்காய்வு குழுவின் அபிப்பிராயம் யாதெனில், செயற்குழுவினால் தீர்மானிக்கப்படும் விடயங்கள் மற்றும் ஏனைய அனைத்து முக்கியமான பிரிவகளினதும் விடயங்களை உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

**கணக்காய்வு குழுவின் பொருட்டு,**

கையெழுத்து தெளிவாக இல்லை
**திருமதி சந்தியா சல்காது**

## 8. தொழிற்பாடு செயற்பாடுகள்

இந்த செயல்திறனுக்கு மேலும் ஒரு சான்றாக, 2024 ஆம் ஆண்டில், உலக வங்கி இலங்கையின் கட்டணமில்லா ‘1990 சுவ செரிய’ ஆம்புலன்ஸ் சேவையை எண்ணிலடங்கா உயிர்களைக் காப்பாற்றியதற்காகவும், குடிமக்களுக்கு மிக உயர்ந்த அளவிலான மருத்துவமனைக்கு முந்தைய பராமரிப்பை வழங்குவதற்காகவும் பாராட்டியுள்ளது.




இந்த செயல்திறனுக்கு மேலும் ஒரு சான்றாக, 2024 ஆம் ஆண்டில், உலக வங்கி இலங்கையின் கட்டணமில்லா ‘1990 சுவ செரிய’ ஆம்புலன்ஸ் சேவையை எண்ணிலடங்கா உயிர்களைக் காப்பாற்றியதற்காகவும், குடிமக்களுக்கு மிக உயர்ந்த அளவிலான மருத்துவமனைக்கு முந்தைய பராமரிப்பை வழங்குவதற்காகவும் பாராட்டியுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் ஒரு வலைப்பதிவு இடுகையில், தாமதமான பராமரிப்பால் ஏற்படும் சிக்கல்களைக் குறைத்து, சாதனை நேரத்தில் அவர்கள் மீண்டும் பணியில் சேர உதவுவதற்காக ஆம்புலன்ஸ் சேவையைப் பாராட்டினார் - இது நாட்டின் பொருளாதாரத்திற்கு நேர்மறையான பங்களிப்பை அளிக்கிறது.

2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 2 மில்லியன் அவசரநிலைகள் எட்டப்பட்டதே இந்த சேவையின் முக்கிய மைல்கல்லாகும். இது, இலங்கை மக்கள் மருத்துவ அவசரநிலை ஏற்பட்டால் தங்கள் வாழ்க்கையின் பொறுப்பை 1990 சுவ செரியவிடம் ஒப்படைத்துள்ளனர் என்பதை நிரூபித்தது.






# 20

**1,276,009**
பெறப்பட்ட அழைப்புக்கள்

**386,884**
கையாளப்பட்டன அவசரநிலை சம்பவங்கள்

**13 : 08**
சராசரி பதிலளிப்பு நேரம்

**8,896,962 km**
பயணம் செய்த தூரம்




567 - அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள்
515 - அம்புலன்ஸ் ஓட்டுனர்கள்

## “ஊயிர்களை காத்தல் - 24/7”

2024.12.31 ஆம் திகதியில் பதவியணி

2024 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்தம் 9,069,729 அழைப்புகள் தொடங்கப்பட்டதிலிருந்து பெறப்பட்டன, தினமும் 5,000 அழைப்புகள் கையாளப்பட்டன, மேலும் இந்த அழைப்புகளில் குறிப்பிடத்தக்க 98.9% அழைப்பு வந்த முதல் மணி ஒலிப்பிலேயே பதிலளிக்கப்பட்டன. மேலும், தினமும் 1,050 க்கும் மேற்பட்ட நோயாளிகள் கொண்டு செல்லப்படுகிறார்கள், தொடக்கத்தில் இருந்து டிசம்பர் 31, 2024 வரை 2,175,571 சம்பவங்கள் கையாளப்பட்டுள்ளன. அழைப்பு பெறப்பட்டு அம்புலன்ஸ் புறப்படுவதற்கிடையிலான 2 நிமிட நேர இடைவெளியுடன், நாடு முழுவதும் சராசரி பதிலளிப்பு நேரம் 13 நிமிடங்கள் மற்றும் 08 வினாடிகள் ஆகும். தினசரி சராசரியாக 27,000 கி.மீ. பயண தூரத்துடன் நாடு முழுவதும் 322 ஆம்புலன்ஸ்களுடன் இயங்குகிறது.

ஒவ்வொரு ஆம்புலன்ஸிலும் அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் (EMTகள்) மற்றும் அம்புலன்ஸ் ஓட்டுனர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் மாறிப்பணியாற்றும் ஷிப்ட் முறைமைக்கு அமைவாகச் செயல்படுவதால், 1990 சுவ செரிய ஆம்புலன்ஸ் சேவை நாளின் 24 மணிநேரமும், வருடத்தின் அனைத்து நாட்களிலும் இடைமறையாமல் செயல்படுகிறது. ஒவ்வொரு EMTக்கும் பரந்த பிரதேசத்தில் உள்ள மக்களுக்குச் சேவை செய்வதற்கான பொறுப்புகள் இருந்தாலும், சேவையின் திறன் மற்றும் பணியாளர்களின் முயற்சி காரணமாக மக்கள் சந்திக்கும் மருத்துவ அவசர நிலைகளுக்கு தகுந்த பதிலை வழங்குவதில் நாம் வெற்றிபெற்றுள்ளோம். 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை, சேவையில் 567 EMTக்களும் 515 அம்புலன்ஸ் ஓட்டுனர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி**

2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆட்சேர்ப்பு செயல்முறையைத் தொடர்ந்து, சில விண்ணப்பதாரர்கள் நேரில் தோன்றாததாலும், தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாததாலும், குறைந்த எண்ணிக்கையிலான அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் (EMTக்கள்) மற்றும் அம்புலன்ஸ் ஓட்டுனர்கள் மட்டுமே ஆட்சேர்ப்புக்குட்படுத்தப்பட்டனர். எனவே, காலியிடங்கள் மறுபடியும் விளம்பரப்படுத்தப்பட்டன. இருப்பினும், 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலையொட்டி அனைத்து ஆட்சேர்ப்பும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன, மேலும் புதிய பணியாளர்களின் சேவையில் இணைப்பும் இடைநிறுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள், மொத்தமாக 66 EMTக்களும் 47 அம்புலன்ஸ் ஓட்டுனர்களும் ஆரம்பப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர். EMT பயிற்சியாளர்கள், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் இணைந்து வழங்கப்படும் (Diploma in Paramedical Sciences) பாடநெறியில் பயிலுகின்றனர்.

பேரிடர் ஏற்பட்ட இடத்தில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர்களாக, அவசரகால மருத்துவ அவசரநிலைகளுக்கு திறம்பட பதிலளிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் ஆம்புலன்ஸ் சேவைகள் முன்கூட்டியே நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம், இதில் தேவையான உபகரணங்கள், பயிற்சி பெற்ற பணியாளர்கள், நிறுவப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள் ஆகியவை அடங்கும், அவை பெரும்பாலும் பேரிடர் திட்டமிடல் மற்றும் பிற சுகாதார வழங்குநர்களுடன் ஒருங்கிணைப்பை உள்ளடக்கியது. நடைமுறைகள் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்கும் நிஜ வாழ்க்கை சூழ்நிலைகளுக்குத் தயாராக இருப்பதற்கும் 1990 சுவ செரிய மன்றத்தின் ஊழியர்கள் பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து பயிற்சிப் பயிற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். அதன்படி, 2024 ஆம் ஆண்டில் கொழும்பு தீயணைப்பு சேவைத் துறை மற்றும் இலங்கை விமானப்படையுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்த வருடாந்திர தீயணைப்புப் பயிற்சியில் 1990 சுவ செரியவின் ஊழியர்கள் பங்கேற்றனர்.






மேலும், தலைமை மருத்துவ அதிகாரியின் வழிகாட்டுதலின் கீழ் ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த துணை மருத்துவ நிபுணர்களால் ஊழியர்கள் புதுப்பித்தல் பயிற்சியைப் பெற்றனர்.

EMTகள் மற்றும் அம்புலன்ஸ் ஓட்டுனர்களுக்கான புதுப்பித்தல் பயிற்சிகள் அக்டோபர் 2024 இல் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் ஸ்ரீலால் டி சில்வா வின் வழிகாட்டுதலில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டா மாவட்டங்களில் பயிற்சி மற்றும் நெறிமுறை பிரிவின் (Training & Protocols Department) தலைமையில் நடத்தப்பட்டன.









அடிப்படை EMT திறன்கள் மற்றும் பயிற்சி (BEST) பாடநெறி & TTT (பயிற்சியாளரைப் பயிற்றுவித்தல்) திட்டம் மார்ச் 2024 இல் ஆஸ்திரேலியா, சிட்னியிலுள்ள லிவர்பூல் மருத்துவமனையில் பணியாற்றும் அவசர மருத்துவர் நிபுணர் வைத்தியர் மற்றும் NSW ஆம்புலன்ஸின் மாநில மீட்பு ஆலோசகர் சஞ்ச் பெர்னாண்டோ மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த முன் மருத்துவமனை பராமரிப்பு நிபுணர் குழுவினரால் வழிநடத்தப்பட்டது, மேலும் ஆஸ்திரேலியாவிற்கான உயரஸ்தானிகர் மாண்புமிகு திரு. பால் ஸ்டீபன்ஸ் அவர்களால் இப்பயிற்சி கண்காணிக்கப்பட்டது.








ஜூன் 2024 இல், பேராசிரியர் வில் புரோட்டன் தலைமையிலான இங்கிலாந்தின் Buckinghamshire New University ஐ சேர்ந்த முன் மருத்துவமனை பராமரிப்பு நிபுணர் குழு, அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் (EMTs) திறன்களை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட Basic Life Support (BLS) பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தது. அந்தக் குழு மன்றத்திற்கு பயிற்சிக்காக பயன்படுத்தப்படும் உருவ பொம்மைகள் (Mannikins) நன்கொடையாக வழங்கியது.








கூடுதலாக, அனைத்து கள ஊழியர்களுக்கும் வெளிச்செல்லும் தலைமைத்துவ பயிற்சிகள் (Out bound training ) மேற்கொள்ளப்பட்டன, அவை தலைமைத்துவ திறன்களை நடைமுறை மற்றும் ஆழமான முறையில் வளர்ப்பதில் கவனம் செலுத்தின, இதன் மூலம் அவர்களின் திறன்களை தனித்தனியாகவும் குழுவாகவும் மேம்படுத்தின.




மேலும், 1990 சுவ செரியா ஆம்புலன்ஸ்களைப் பெறுவது மற்றும் மருத்துவமனைகளில் நிறுவப்பட உள்ள வருகை நேரத் திரைகள் குறித்து மருத்துவமனைகளின் அவசர சேவை ஊழியர்களுக்கு ADB - HSEP மற்றும் இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரியுடன் இணைந்து விழிப்புணர்வு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.



**நன்கொடைகள் - "ஆம்புலன்ஸ் ஒன்றை தத்தெடுத்தல்"**

பட்ஜெட் பற்றாக்குறையை ஈடுசெய்ய நமது உயிர்காக்கும் நடவடிக்கைகளைத் தொடரும் வகையில் தொடங்கப்பட்ட ஆம்புலன்ஸ் ஒன்றை தத்தெடுக்கவும் திட்டம், இலங்கையில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து நேர்மறையான பதிலுடன் நடந்து வருகிறது.

**சேவை அங்கீகாரம்**




1990 சுவ செரிய அறக்கட்டளையின் சேவைகளின் செயல்திறன் ஏப்ரல் 02, 2024 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் பாராட்டப்பட்டது, மேலும் "சுவ செரிய ஆம்புலன்ஸ் சேவைக்கான ஆதரவு மற்றும் வசதிகள்" குறித்த ஒத்திவைப்பு நேரப் பிரேரணையில் கௌரவ (திருமதி) ரோகிணி குமாரி விஜேரத்னா அவர்களால் முன்மொழியப்பட்டது.



**9.** நிதிசார் செயல்திறன

கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள

**1990 சுவசெரிய மன்றம்**

**2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள்**

**1990 சுவசெரிய மன்றம்** 

| **திகதியில் நிதி நிலைமைக் கூற்று** | குறிப்பு | **2024.12.31** ரூபா | **2023.12.31** ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 4 | 985,161,489 | 812,666,168 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 985,161,489 | 812,666,168 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட் பதிவேடு | 5 | 142,478,868 | 137,795,724 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய தொகை | 6 | 441,074,908 | 421,370,688 |
| காசும் காசுக்கு சமமானவைகளும். | 7 | 1,099,471,153 | 1,009,958,277 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | 1,683,024,930 | 1,569,124,689 |
| **மொத்த சொத்துக்கள்** | | 2,668,186,419 | 2,381,790,857 |
| **நிதி மற்றும் பொறுப்புகள்** | | | |
| **திரட்டிய நிதியம்** | | | |
| பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் - மூலதனம் - இந்திய அரசாங்கத்தால் கிடைக்கப்பெற்ற மானியங்கள் | 8 | 55,433,217 | 176,627,794 |
| வரையறுக்கப்பட்ட நிதியம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள் | 9 | 667,751,138 | 667,751,138 |
| பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் - மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற மானியங்கள் | 10 | 502,524,685 | 453,880,115 |
| மீள்கணிப்பீடு செய்யும் ஒதுக்கம் | 11 | 551,405,000 | 247,925,000 |
| நியமிக்கப்பட்ட இருப்புக்கள் - நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியம் | 12 | 36,370,525 | 29,085,500 |
| திரட்டிய மிகை / (பற்றாக்குறை) | | 566,382,797 | 511,631,438 |
| வரையறுக்கப்பட்ட நிதிகள் - நன்கொடையாளர்களிடமிருந்து மானியங்கள்) | | 22,500,000 | - |
| **மொத்த திரட்டிய நிதியம்** | | 2,402,367,362 | 2,086,900,985 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| ஊழியர் நலன்கள் | 13 | 144,811,806 | 128,622,431 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | 144,811,806 | 128,622,431 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| ஏனைய பொறுப்புகள் | 14 | 40,587,860 | 63,460,556 |
| மானியங்கள் | 15 | 80,419,391 | 102,806,885 |
| **மொத்த நடைமுறை பொறுப்புகள்** | | 121,007,251 | 166,267,441 |
| **மொத்த பொறுப்புகள்** | | 265,819,057 | 294,889,872 |
| **மொத்த திரட்டிய நிதியம் மற்றும் பொறுப்புகள்** | | 2,668,186,419 | 2,381,790,857 |

பக்க இலக்கம் 05 - 16 வரையுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட, இலாபம்பெறாத அமைப்புகளின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட

............................................ ............................................

**தலைமை நிதி அதிகாரி** **தலைமை நிறைவேற்று அதிகாரி**

இந்த நிதிக் கூற்றுகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பு கூறுகின்றது.
சபையின் பொருட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

............................................ ............................................

**தலைவர் / பணிப்பாளர்** **பணிப்பாளர்**

2024 ஏப்ரல் 11
**கொழும்பு**

| விரிவான வருமானம் தொடர்பான கூற்று | குறிப்பு | 2024.12.31 முடிவடையும் ரூபா | 2023.12.31 முடிவடையும் ரூபா |
|---|---|---|---|
| **தொழில்பாட்டு வருமானம்** | | | |
| கிடைக்கப்பெற்ற வளங்கள் | 16 | 2,424,828,539 | 2,223,444,915 |
| **மொத்த தொழில்பாட்டு வருமானம்** | | 2,424,828,539 | 2,223,444,915 |
| **தொழில்பாட்டு செலவினம்** | | | |
| நேரடி செலவினம் | 17 | (2,190,143,321) | (1,901,246,655) |
| நேரடியற்ற செலவினம் | 18 | (388,218,153) | (320,738,766) |
| **மொத்த தொழில்பாட்டு செலவினம்** | | (2,578,361,475) | (2,221,985,420) |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளின் தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | (153,532,935) | 1,459,495 |
| **ஏனைய வருமானம்** | | | |
| ஏனைய செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் | 19 | 202,622,090 | 263,863,037 |
| நிதிசார் வருமானம் | 20 | 4,189,580 | 4,607,563 |
| **மொத்த ஏனைய வருமானம்** | | 206,811,671 | 268,470,600 |
| **ஆண்டுக்கான நிகர மிகை / (பற்றாக்குறை)** | | 53,278,735 | 269,930,094 |
| **பிற விரிவான வருமானம்** | | | |
| மறுமதிப்பீட்டு இருப்பு | 4.2 | 303,480,000 | - |
| **மொத்த விரிவான வருமானம்** | | 356,758,735 | 269,930,094 |

பக்க இலக்கம் 05 தொடக்கம் 16 வரை உள்ள குறிப்புகள் இந்தக் கூற்றுகளில் முக்கியமான அம்சமாகும்.

1990 சுவசெரிய மன்றம்


திரட்டிய நிதியத்தின் மாற்றங்கள் தொடர்பான கூற்று

| | விதிக்கப்பட்ட ஒதுக்கம் - மூலதனம் - இந்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள் | வரையறுக்கப்பட்ட நிதியம் -இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள் | பெயரிடப்பட்ட ஒதுக்கம்- மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் மானியங்கள் | நியமிக்கப்பட்ட இருப்புக்கள் - மூலதனம் - நன்கொடையாளர்களிடமிருந்து மானியங்கள் | மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | திரட்டிய மிகை (பற்றாக்குறை) | வரையறுக்கப்பட்ட நிதிகள் - நன்கொடையாளர்களிடமிருந்து மானியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **366,170,755** | **679,434,218** | **418,940,000** | **-** | **247,925,000** | **241,701,344** | **-** | **1,954,171,317** |
| ஆண்டில் பயன்படுத்திய நிதி | - | (11,683,080) | - | 29,085,500 | - | - | | 17,402,420 |
| சொத்துக்களை அகற்றும் போது ஒதுக்கம் - காசாக்கல் | - | - | - | | - | - | | - |
| ஆண்டில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை சேர்த்தல், மற்றும் மாற்றம் செய்தல் | - | - | 69,003,115 | | - | - | | 69,003,115 |
| தேய்மானம் காரணமாக நிதியத்தின் - காசாக்கல் | (189,542,961) | - | (34,063,000) | | - | - | | (223,605,961) |
| மோட்டார் வாகனங்களில் மிகை - மீள்கணிப்பீடு செய்தல் | - | - | - | | - | - | | - |
| மீள்கணிப்பீடு மீது காசாக்கல்- மேற்கொள்ளப்படாத ஒதுக்கம் | - | - | - | | - | - | | - |
| ஆண்டுக்கான நிகர மிகை / (பற்றாக்குறை) | - | - | - | | - | 269,930,094 | | 269,930,094 |
| **2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **176,627,794** | **667,751,138** | **453,880,115** | **29,085,500** | **247,925,000** | **511,631,438** | **-** | **2,086,900,985** |
| **முந்தைய ஆண்டு சரிசெய்தல்கள் (குறிப்பு)** | **-** | **-** | **(2,750,436)** | **(13,813)** | **-** | **1,483,023** | **-** | **(1,281,225)** |
| **ஜனவரி 01, 2024 அன்று உள்ள இருப்பு (சரிசெய்தல்களுக்குப் பிறகு)** | **176,627,794** | **667,751,138** | **451,129,679** | **29,071,687** | **247,925,000** | **513,114,462** | **-** | **2,085,619,760** |
| ஆண்டில் பயன்படுத்திய நிதி | - | - | - | 10,554,208 | - | - | | 10,554,208 |
| வருடத்தில் பெறத்தக்க நிதிகளின் அளவு | | | | | | | 22,500,000 | 22,500,000 |
| சொத்துக்களை அகற்றும் போது ஒதுக்கம் - காசாக்கல் | - | - | - | - | - | - | | - |
| ஆண்டில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை சேர்த்தல், மற்றும் மாற்றம் செய்தல் | - | - | 69,003,115 | - | - | - | | 69,003,115 |
| அமைச்சு வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்கள் | | | 9,592,643 | | | | | 9,592,643 |
| தேய்மானம் காரணமாக நிதியத்தின் - காசாக்கல் | (121,194,577) | - | (102,585,132) | (3,255,369) | - | - | | (227,035,078) |
| மோட்டார் வாகனங்களில் மிகை - மீள்கணிப்பீடு செய்தல் | - | - | - | - | - | - | | - |
| மீள்கணிப்பீடு மீது காசாக்கல்- மேற்கொள்ளப்படாத ஒதுக்கம் | - | - | - | - | 303,480,000 | - | | 303,480,000 |
| ஆண்டுக்கான நிகர மிகை / (பற்றாக்குறை) | - | - | - | - | - | 53,278,735 | | 53,278,735 |
| **2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **55,433,217** | **667,751,138** | **427,140,306** | **36,370,525** | **551,405,000** | **566,382,797** | **22,500,000** | **2,326,982,983** |

பக்க இலக்கம் 05 தொடக்கம் 16 வரையில் உள்ள குறிப் குறிப் குறிப்புகள் , இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

## காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2024.12.31 முடிவடையும் ஆண்டுக்காக ரூபா | 2023.12.31முடிவடையும் ஆண்டுக்காக ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| தேறிய மிகை / பற்றாக்குறை | | 53,278,735 | 269,930,094 |
| **மிகை / (பற்றாக்குறை) தேறிய காசுப் பாய்ச்சலுடன் ஒப்பிடுவதற்கான சீராக்குதல்கள்** | | | |
| **பணம் அல்லாத உருப்படிகள்** | | | |
| தேய்மானம் | 4 | 277,188,642 | 45,239,334 |
| ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 13 | 22,044,500 | 22,671,250 |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழில்பாட்டு மிகை** | | 352,511,877 | 337,840,678 |
| செலுத்தப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை | 13 | (5,855,125) | (5,948,444) |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தேறிய தொழில்பாட்டு மிகை** | | 346,656,752 | 331,892,234 |
| **செயற்பாட்டு மூலதன சீராக்கல்** | | | |
| **(அதிகரிப்பு) / கழித்தல்:** | | | |
| பொருட் பதிவேடு | 5 | (4,683,144) | (82,848,232) |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய பணத்தொகை | 6 | (19,704,221) | (57,899,824) |
| செலுத்தப்பட வேண்டிய - ஏனைய | 14 | (22,872,696) | (42,491,691) |
| வரையறுக்கப்பட்ட நிதி - புதிய நோயாளர் வண்டிகளுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து மூலதன மானியங்கள் | 15 | (22,387,494) | 47,000,000 |
| **தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய ) தேறிய காசுப் பாய்ச்சல்** | | 277,009,197 | 195,652,486 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) காசுப்பாய்ச்சல்** | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 4 | (147,990,438) | (48,800,091) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட /(பயன்படுத்திய) தேறிய பணவோட்டம்** | | (147,990,438) | (48,800,091) |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய ) பணவோட்டம்** | | | |
| நிதியக் கணக்கு அதிகரித்தல் /குறைதல் | | (39,505,883) | 17,402,420 |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | | (39,505,883) | 17,402,420 |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவடைதல்)** | | 89,512,876 | 164,254,815 |
| **காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | | 1,009,958,277 | 845,703,462 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | 7 | 1,099,471,153 | 1,009,958,277 |

பக்க இலக்கம் 5 தொடக்கம் 16 வரையிலான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுகளில் கட்டாயமான அம்சமாகும்.

**1. பொதுவான தகவல்கள்**

1990 சுவசெரிய மன்றம் 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க சட்டம் பிராகரம் பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கமைவாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி தாபிக்கப்பட்டுள்ளது.

1990 சுவசெரிய மன்றம் யானது, 1307 ஊழியர்களைக் கொண்டு நாடு முழுவதும் இலவசமாக மருத்துவமனை சிகிச்சைகளுக்கான அவசர நோயாளர் வண்டி சேவைகளை வழங்குகின்றது. மன்றம் யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வியாபார நிலையம் இலக்கம் 415, கோட்டை வீதி, ராஜகிரிய என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதும் 322 அமைவிடங்களில் காணப்படுகின்றன.

**2. தயாரிக்கும் அடிப்படை**

**2.1 இணக்கம் தொடர்பான கூற்று**

2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் காலப்பகுதிக்காக நிதி நிலைமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, திரட்டிய நிதிகளின் மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் வழங்கிய இலாபம் பெறாத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பான இலங்கை கூற்றுக்கு (SL SoRP – NPOs) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.2 அளவிடுதலுக்கான அடிப்படை**

நிதிக் கூற்றுகள், அவற்றின் நியாயமான பெறுமதிகளால் வெளிப்படுத்துகின்ற கடனீட்டுப் பத்திரங்கள் மற்றும் நிதி உபகரணங்கள் தொடர்பில் தவிர்ந்த, வரலாற்று செலவுகளை அடிப்படையாகக்கொண்டு யதாரிக்கப்படுகிறது.

**2.3 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்**

நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாக்களைக் கொண்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.
இது மன்றம் யின் செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமாகும்.

**2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை உபயோகப்படுத்தல்**

இலாபம் பெறாத அமைப்புகளின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகள் தொடர்பான இலங்கை கூற்றுக்கு (SL SoRP – NPOs) அமைவாக, நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் முகாமைத்துவம் கணக்கீட்டு கொள்கைகளை உபயோகிப்பதற்கும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களுக்கு ஏதுவாக அமையும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் அத்துடன் அனுமானங்களை மேற்கொள்ளுதல் அவசியமாகும். உண்மையான பெறுபேறுகள் குறித்த மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் வலுவிலுள்ள அனுமானங்கள் தற்போதுள்ள அடிப்படையின் ஆய்வு செய்யப்படுகிறது. மதிப்பீடுகளை திருத்தம் செய்யப்படுகின்ற காலப்பகுதியில் கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தங்களை அடையாளம் காணப்படுகின்றன. திருத்தங்கள் எதிர்கால காலப்பகுதிக்கு பாதிப்புகளை ஏற்படுத்துமாயின் அத்தகைய திருத்தங்கள் எதிர்காலங்களில் அடையாளம் காணப்படும்.

நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணப்பட்ட அளவுகளின் மீது மிக முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துகையில், மதிப்பீடு செய்தல், நிச்சியமற்ற தன்மை மற்றும் முக்கியமான தீர்ப்புகள் தொடர்பிலான முக்கியமான துறைகளின் தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- குறிப்பு 4 – சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்
- குறிப்பு 13 – ஊழியர் நலன்கள்

**2.5 கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்**

கணக்கீட்டு கொள்கைகளை வேறு வகையில் வெளிப்படுத்தாதுவிட்டாலும், தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவை முன்னரான ஆண்டுடன் இணங்குகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

3. கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

3.1 வெளிநாட்டு நாணய மாற்றம்

வெளிநாட்டு நாணய மாற்றங்கள், மாற்றங்களை மேற்கொள்கின்ற திகதிகளில் (spot exchange rate) நிலவும் மாற்று விகிதங்களைப் பயன்படுத்தி அந்தந்த நிறுவனத்தின் செயல்பாட்டு நாணயமாக மாற்றப்படுகிறது. அத்தகைய பரிவர்த்தனைகளை தீர்க்கப்படுதல் காரணமாகவும் ஆண்டு இறுதி அந்நியச் செலாவணி விகிதங்களின் கீழும் காசுப் பொருட்களின் மீள்-அளவீடு ஆகியவற்றின் விளைவாக அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வரலாற்றுச் செலவில் அளவிடப்படும் காசல்லாத பொருட்கள் மீள மாற்றப்படுவதில்லை. நியாயமான மதிப்பில் அளவிடப்படும் காசல்லாத பொருட்கள், நியாயமான மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட தேதியில், காணப்படும் மாற்று விகிதங்களுக்கமைவாக மாற்றப்படுகின்றன.

3.2 காசும் காசுக்கு சமமானவைகளும்

முன்னராக அறியக் கூடியதான இலகுவாக காசாக்குவதற்கு முடியுமான மற்றும் மதிப்பீடுகளில் மாற்றத்தின் சிறிதளவிலான இடர் நிலைக்கு உட்படும் அதிக திரவ முதலீடுகள் அதாவது, குறுகியகால முதலீடுகள், கையிருப்பு பணம் என்பவற்றைக்கொண்டு காசும் காசுக்கு சமமானவைகளும் அமைந்திருக்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்றில் நோக்கங்களுக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் கையிருப்பு பணம், வைப்புகள் மற்றும் தேறிய வங்கி மேலதிக பற்றுகள் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்றில் நேரடியல்லாத முறைகளை பயன்படுத்தப்பட்டுள்ளன.

3.3 நிதிசார் உபகரணங்கள்

நிதிச் சொத்துக்கள்

நிதிசார் சொத்துக்கள் பின்வரும் தொகுதிகளுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஊடாக நியாயமான பெறுமதிகளுடன் கூடிய நிதிசார் சொத்துக்கள், முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் நிதிசார் சொத்துக்கள் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பணம், விற்பனைக்குள்ள நிதிசார் சொத்துக்கள்.

**இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஊடாக நியாயமான பெறுமதிகளைக் கொண்ட நிதிசார் சொத்துக்கள்**

இலாபம் மற்றும் நட்டங்களின் ஊடாக நியாயமான மதிப்பில் உள்ள நிதிச் சொத்துக்கள், விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும் எந்தவொரு விளைபயன் மற்றும் இலாபம் அல்லது நட்டத்துடன் நடைமுறை சொத்துகளாக வகைப்படுத்தப்படும்.

பட்டியலிடப்பட்ட கடனீட்டு பத்திரங்களின் நியாயமான மதிப்பானது, அறிக்கையிடப்பட்ட தேதியில் அவற்றின் மேற்கோள் காட்டப்பட்ட விலைமனு விலையாகும். நிதி வருமானம் முக்கியமாக வட்டி மற்றும் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்களில் நிகர கிடைக்கப்பெற்ற மற்றும் கிடைக்கப்பெறாத வருமானங்களைக் கொண்டுள்ளது. சொத்தின் பயனுள்ள நலன்களை கவனத்தில் கொண்டு, வட்டி வருமானம் திரட்டிய அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது.

**கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள்**

முதலாவதாக, கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளை, அவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அடையாளம் காணப்படுகிறது. ஏனைய எல்லா நிதிச் சொத்துக்களையும் சந்தை திகதியில் அடையாளம் காணப்படுகிறது. அதாவது மன்றம் யானது, சம்பந்தப்பட்டவைகளின் பொருட்டு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பாக மாறும் திகதியாகும். முடங்கும் இழப்புகளை ஈடுசெய்வதற்காக நிலுவை பணத் தொகை மீதான கொடுப்பனவில் அவர்களது நிகர செலவினமாக கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நிதிசார் பொறுப்புகள்**

நிதி பொறுப்புகளில் மன்றத்தால், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு செலுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதிசார் பொறுப்புகள் முதலாவதாக அடையாளம் காணப்படுவது கொடுக்கல்வாங்கல் மேற்கொண்ட விலைக்கு ஆகும். அடிப்படை குறிப்புகளை வைத்த பின்னர், அவற்றை அளவிடப்படுவது கடன்தீர்ப்பு முறையிலாகும். இந்த நிதியாண்டில் செலுத்தப்பட வேண்டிய எந்தவொரு தரப்புகளையும் நாம் அடையாளம் காணப்படவில்லை.

**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)**

## 3. கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம்

### 3.3 நிதிசார் கருவிகள் (தொடர்பு)

**நிதிசார் சொத்துக்களின் முடங்கும் இழப்புகள்**

முடங்கும் இழப்புகள் உள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்காக, அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் அவற்றின் ஆற்றல் பெறுமதி ஆய்வு செய்யப்படும். நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்கள் கூட்டாக முடங்கும் இழப்புகள் உள்ளனவா என்பதற்கு புறநிலை வலுவான சாட்சிகள் உள்ளனவா என்பது தொடர்பாக மன்றம் மதிப்பீடு செய்யும். நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்கள் கூட்டாக முடங்கும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று கவனத்தில் கொள்ளப்படுவது, சொத்து அல்லது சொத்துகளாக அடையாளம் காணப்பட்டதன் பின்னர் (incurred loss model) ஒரு நிகழ்வு அல்லது மேற்பட்டவைகளின் பயனாக ஏற்படும் இழப்பு தொடர்பாக புறநிலை சாட்சிகள் வலுவாக இருத்தலும், குறித்த இழப்புகள் காரணமாக நிதிசார் சொத்துக்களில் அல்லது நம்பகரமானதாக மதிப்பிட முடியுமான நிதிசார் சொத்துகளில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலுக்கு தாக்கங்களை ஏற்படுத்தினால் மட்டுமே ஆகும்.

### 3.4 பொருட் இருப்புகள்

காலாவதியான மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவுகளை செய்த பின்னர், பொருட் இருப்புகளை உண்மையான செலவின அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

### 3.5 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

#### 3.5.1 முறையாக குறிப்பு வைத்தல் மற்றும் அளவிடல்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் குறைந்து செல்லும் திரண்ட தேய்மானத்தில் அளவிடப்படும். சொத்துக்களின் கையகப்படுத்தலுக்கு நேரடியாக காரணமாகும் செலவுகள் செலவினத்தில் அடங்கும்.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற பொருட் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் மாறுப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் உள்ளவிடத்து, அத்தகைய பகுதிகள் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் புறம்பான பொருட்களாக (பிரதான கூறுகளாக) கணக்கிடப்படும்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றம் உபகரணங்கள் அகற்றும்போது இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அகற்றப்படுவதன்மூலம் கிடைக்கப்பெறுகின்ற வருமானம், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றம் உபகரணங்களில் முன்கொண்டுச் செல்கின்ற பெறுமதிகளுடன் ஒப்பிடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுவதன்மூலம் தீர்மானிக்கப்படும்.

#### 3.5.2 பிற்கால செலவினங்கள்

பிற்கால செலவினங்கள் மூலதனமயப்படுத்தல் மேற்கொள்ளப்படுவது, அது சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் அதிகரித்தால் மட்டுமே ஆகும். ஏனைய எல்லா செலவினங்களும் விரிவான வருமானக் கூற்றில் மேற்கொண்ட செலவினமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

#### 3.5.3 மீண்டும் மதிப்பிடல்

மீண்டும் மதிப்பிடும் திகதியில் அதன் நியாயமான பெறுமதியில் பிற்கால திரட்டிய தேய்மானங்களை கழித்த பின்னர் நியாயமான பெறுமதியை நம்பகமாக அளப்பதற்கு முடியுமான சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண பொருட்களை மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கொண்டு வருதல் வேண்டும். ஏதேனும் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீண்டும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தியவுடன், அத்தகைய சொத்துக்களின் மொத்த தொகுதியும் மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். நியாயமான பெறுமதி மற்றும் ஆற்றல் பெறுமதி என்பவற்றுக்கிடையில் வேறுபாடு உள்ளவிடத்து, நியாயமான பெறுமதி அதன் ஆற்றல் பெறுமதியிலும் பார்க்க பொருட் ரீதியாக மாற்றம் ஏற்படாதென சான்றுப்படுத்துவதற்காக, தொழில்சார் ரீதியாக தகைமைகளைப் பெறுகின்ற மதிப்பீட்டாளரால் மோட்டார் வாகனங்களுக்காக மீண்டும் மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

மீண்டும் மதிப்பிடல் காரணமாக கொண்டுச் செல்கின்ற பணத் தொகையின் அதிகரிப்பை, மீண்டும் மதிப்பிடலின் மிகை என்ற தலைப்பின் கீழ் திரட்டிய நிதியத்தில் வரவு வைக்கப்படும். எவ்வாறெனிலும், அது விரிவான வருமானக் கூற்றில் முன்னராக குறிப்பு வைக்கப்பட்டுள்ள, குறித்த சொத்தின் மீள் மதிப்பீட்டின் பற்றாக்குறை மீள் மாற்றியமைக்கும் தொகைக்கு அதிகரித்தலானது, விரிவான வருமானக் கூற்றில் முறையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அகற்றப்பட்டதன் பின்னர், விற்பனை செய்கின்ற குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களுக்கு ஏற்புடையதான எந்தவொரு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட மிகை விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும்.

**3. கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் (தொடர்பு)**

**3.5 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (முன்னரான பக்கத்தில்)**

**3.5.4 தேய்மானம்**

ஏற்படைய சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தையும் பார்க்க straight-line method அடிப்படையில் எல்லா சொத்துக்களினதும் தேய்மானம் மேற்கொள்ளப்படும். அதேபோன்று சொத்துக்களின் தேய்மானமானமானது குறித்த சொத்துக்கள் பயன்படுத்தும் போதே மேற்கொள்ளப்படும். குறித்த சொத்துக்கள் விற்பனைக்காக வகைப்படுத்தியுள்ள திகதி மற்றும் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளப்படாத திகதியில் அவற்றின் தேய்மானம் நிறுத்தப்படும். தேய்மானம் மாதாந்த அடிப்படையில் கணக்கிடப்படுவதுடன், கொள்வனவு செய்த மாதம் பொருட்டு முற்றுமுழுதாக அறவிடப்படும். சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வரும் வகையிலாகும்.

| சொத்து வகை | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| மோட்டார் வாகனங்கள்- 1 கட்டம் (2022 செப்தெம்பர் 30 வரை) | 06 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் - கட்டம் 2 மற்றும் 3 | 06 ஆண்டுகள் |
| தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் | 04 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் துணை கருவிகள் | 08 ஆண்டுகள் |
| மருத்துவ உபகரணங்கள் | 08 ஆண்டுகள் |
| மென்பொருட்கள் | 05 ஆண்டுகள் |
| கருவிகள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |

கட்டம் 1 மோட்டார் வாகனங்கள் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் மீண்டும் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், குறித்த மோட்டார் வாகனங்களில் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் பின்வரும் வகையில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 15 மோட்டார் வாகனங்கள் | **5 ஆண்டுகள்** |
| 61 மோட்டார் வாகனங்கள் | **6 ஆண்டுகள்** |
| 05 மோட்டார் வாகனங்கள் | **7 ஆண்டுகள்** |
| 04 மோட்டார் வாகனங்கள் | **8 ஆண்டுகள்** |

கட்டம் 2 மோட்டார் வாகனங்கள் 2024 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் மீண்டும் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், குறித்த மோட்டார் வாகனங்களில் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலம் பின்வரும் வகையில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 77 மோட்டார் வாகனங்கள் | **2 ஆண்டுகள்** |
| 88 மோட்டார் வாகனங்கள் | **3 ஆண்டுகள்** |
| 42 மோட்டார் வாகனங்கள் | **4 ஆண்டுகள்** |

**3.5.5 அன்பளிப்புச் செய்த சொத்துக்கள்**

வரையறுக்கப்பட்ட நிதி ஊடாக கருத்திட்டமொன்றில் ஒரு பகுதியாக சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்கையில், கருத்திட்டம் முடிவுற்றவுடன் சொத்துக்களை பயன்பெறுநருக்கு ஒப்படைக்காதுவிட்டால் அல்லது ஆரம்ப அன்பளிப்பாளருக்கு மீண்டும் வழங்கப்படாதுவிடின், கருத்திட்டம் முடிவடைந்த பின்னர் சொத்து மதிப்பீடு செய்வதுடன், மூலதன ஒதுக்கம் ஊடாக சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதி கூற்றுகளுக்கு கொண்டு வரப்படும். அத்தகைய சொத்துக்களின் தேய்மானம் ஒதுக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும். தேய்மானத்தின் நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கும் பொருட்டு மதிப்பிடப்பட்ட திகதியாக கொள்வனவு செய்த திகதி கருதப்படும்.

**3.5.6 சொத்துக்களின் முடங்கும் இழப்புகள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், குறித்த சொத்துக்களில் நட்டங்கள் ஏற்பட்டுள்ளதா என்று அடையாளம் காணுவதற்கு சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும். சொத்தின் ஆற்றல் பெறுமதி அதன் அறவிடும் தொகையை விட விஞ்சுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் முடங்கும் இழப்பு அடையாளம் காணப்படும். விரிவான வரமானக் கூற்றில் முடங்கும் இழப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. அறவிட முடியுமான தொகையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தும் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின், முடங்கும் இழப்பு மீள மாற்றப்படுவதுடன், எந்தவொரு முடங்கும் இழப்பையும் அடையாளம் காணதவிடத்து சொத்தின் ஆற்றல் பெறுமதியானது தேய்மானம் அல்லது தேய்மானங்களில் நிகர தொகைபடி தீர்மானிக்க முடியுமான ஆற்றல் பெறுமதியை கொண்டிருக்கும்.

**3.6 ஊழியர் நலன்கள்**

**3.6.1 குறித்துரைக்கப்பட்ட நலன்கள் திட்டம்**

உறுதியான நன்மைத் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர வேலைவாய்ப்புக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். உறுதியான நலன்கள் தொடர்பில் கம்பெனியின் நிகர பொறுப்புகள், தற்கால மற்றும் முன்னரான காலங்களில் ஊழியர்கள் அவர்களின் சேவைக்காக உழைத்துள்ள எதிர்கால நலன்களின் அளவை மதிப்பீடு செய்வதன் மூலம் ஒவ்வொரு திட்டம் பொருட்டும் வெவ்வேறாக கணக்கிடப்படும்
மன்றம் யால் கணக்கிடல் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஊழியர் நலன்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன்படி அனைத்து ஊழியர்களுக்கும் சேவையில் முதலாவது ஆண்டு தொடக்கம் ஓய்வூதிய பணிக்கொடை கொடுப்பனவு பொருட்டு நிதிக் கூற்றுகளில் ஏற்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் படி, ஊழியரிடம் செலுத்தும் பொறுப்பு 05 ஆண்டு தொடர்ச்சியான சேவைக்காலத்தின் பின்னர் ஏற்படுகின்றது.
பொறுப்பு வெளியக நிதியங்கள் மூலம் நிதியிடல் மேற்கொள்ளப்படும்.

**3.6.2 குறித்துரைக்கப்பட்ட நலன்கள் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

குறித்துரைக்கப்பட்ட பங்களிப்பு திட்டம் என்பது வேலைவாய்ப்புகளுக்கு பின்னரான நலன்கள் திட்டம் என்பதுடன், அதன்கீழ் நிறுவனம், புறம்பான நிறுவனத்திடம் நிலையான பங்களிப்புத் தொகை செலுத்துவதுடன், மேலதிகமாக பணம் செலுத்துவதற்கு சட்டத்துடனான பொறுப்பு இல்லை. எல்லா ஊழியர்களும் உள்ளடங்கும் வகையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பொருட்டு பங்களிப்பு வழங்குவதற்கான பொறுப்புகள் இலாபம் அல்லது நட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
மன்றம் யால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பறொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புத் தொகையாக ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 12% மற்றும் 3% என்ற வகையில் பங்கிளப்புச் செய்யப்படுகிறது.

**3. கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் (தொடர்பு)**

**3.7 நிதியம் /ஒதுக்கங்கள் கிடைக்கப்பெறுவனவைகளும் பயன்படுத்திய கணக்கீடுகளும் ஒதுக்கங்கள்**

ஒதுக்கங்கள் வரையறுக்கப்பட்ட அல்லது பெயரிடப்பட்ட என்ற வகையில் ஒதுக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

**அ) குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கம் / நிதியம்**

குறித்துரைக்கப்பட்ட பணிக்காக அறக்கட்டளையால் பெயரிடப்பட்ட வரையறுக்கப்படாத நிதியங்களை அடிப்படையாகக்கொண்ட நிதியம் குறித்துரைக்கப்பட்ட நிதியங்களாக அடையாளம் காணப்படும். இந்த நிதியம் பயன்படுத்த முடியுமான செயற்பாடுகளாக நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட கருத்திட்டம் அல்லது மூலதன இயல்பிலான ஒரு செயற்பாடுகளின் பயன்பாட்டுக்காக சொத்துக்கள்/நிதி கிடைக்கப்பெறுமாயின், அத்தகைய சொத்துக்கள் மற்றும் குறித்த நிதியங்களில் கொள்வனவு செய்கின்ற சொத்துக்கள் பெயரிடப்பட்ட ஒதுக்கம் - மூலதன கணக்கில் மாற்றப்படும்.

**ஆ) வரையறுக்கப்பட்ட ஒதுக்கம் / நிதியம்**

அடையாளம் காணப்படும் கருத்திட்டம் அல்லது செயற்பாட்டின் பயன்பாட்டுக்காக நன்கொடைகள் கிடைக்கப்பெறுகின்றவிடத்து, குறித்த நிதி வரையறுக்கப்பட்ட நிதியத்தின் கணக்கில் வைத்துக்கொண்டு, குறித்த அடையாளம் காணப்பட்ட கருத்திட்டத்தின் பொருட்டு மேற்கொண்ட செலவினத்துடன், சீராக்குவதற்கு விரிவான வருமானக் கூற்றுக்கு மாற்றப்படும். பயன்படுத்தப்படாத நிதியம் அவர்களின் ஏற்புடைய நிதியக் கணக்கில் வைத்துக்கொண்டுள்ளதுடன், அவை தேவைப்படும் வரை நிதிநிலைமை தொடர்பான கூற்றின் திரட்டிய நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த வரையறுக்கப்பட்ட நிதி பயன்படுத்த முடியுமான மற்றும் பயன்படுத்துகின்ற செயற்பாடுகள் நிதிக் கூற்றுகளின் குறிப்புகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**இ) மீண்டும் மதிப்பிடும் ஒதுக்கம்**

மீண்டும் மதிப்பிடப்படும் ஒதுக்கம், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மீள் கணிப்பீட்டு பெறுமதியைக் கொண்டமைந்திருக்கும்.

**3.8 மானியங்கள் மற்றும் நன்கொடைகள்**

நிதிக் கூற்றுகளில் நன்கொடைகள் மற்றும் மானியங்கள் அவற்றின் நியாயயமான பெறுமதி மீது ஏற்றுக்கொள்ளப்படும். நன்கொடைகள் மற்றும் மானியங்கள் செலவினங்களுக்கு ஏற்புடையதாகுமிடத்து, அதனை முறையான அடிப்படையில் பதிலீடு செய்வதற்கு கருதுகின்ற செலவினங்களுடன் அதனை சீராக்குவதற்கு தேவையான காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படும்.

சொத்துக்களுக்கு ஏற்புடையதான நன்கொடைகள் மற்றும் மானியங்கள் பொதுவாக நிதி நிலைமை தொடர்பான கூற்றிலிருந்து பிற்போடப்படுவதுடன், சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீது விரிவான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படும்.

**3.9 வருமானம் அடையாளம் காணுதல்**

**3.9.1 பங்களிப்பு / வருமானங்களின் மூலங்கள்**

வரையறுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுவது எவ்வாறெனில், நிதி கிடைக்கப்பெறுதலின் அனைத்து நிபந்தனைகளுக்கமைவாக பணியாற்றியுள்ளதாக சான்றளித்துள்ளவிடத்தும், பதிலீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற உரிய செலவினம் விரிவான வருமானக் கூற்றில் மேற்கொண்டுள்ள மற்றும் அறவிடப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்

அத்தகைய நிதி பயன்படுத்தும் அடிப்படையில் சட்டரீதியான உரித்துகள் உள்ளவிடத்து ஏனைய அனைத்து வருமானங்களையும் அடையாளம் காணப்பட்டு அளவுகளை கணக்கிடலாம்.

**3.9.2 வருமானம்**

உழைக்கும் வட்டி திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அகற்றும்போது, நிகர இலாப, நட்டங்கள், கிடைக்கப்பெறும் வருமானம், அகற்றப்பட்ட பொருட்களின் ஆற்றல் பெறுமதி மற்றும் அதற்கு ஏற்புடையதான எந்தவொரு விற்பனை செலவினங்களையும் குறைக்கப்பட்டதன் பின்னர் விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மூலதன ஒதுக்கத்திலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மூலதன ஒதுக்கத்தில் விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும். மீண்டும் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில், மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்க கணக்கில் எஞ்சியுள்ள எந்தவொரு விரிவான வருமானக் கூற்றில் மாற்றப்படும்.

ஏனைய வருமானம் திரண்ட அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

**3.10 செலவினங்களை அடையாளம் காணுதல்**

மன்றம் யின் தொழிற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது, அவற்றின் செலவினம், அவற்றை மேற்கொள்கின்ற காலப்பகுதியில் விரிவான வருமானக் கூற்றில் அயைடாளம் காணப்பட்டுள்ளது. மன்றம் நிருவகிக்கும் போதும் பராமரிக்கையிலும் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மறுசீரமைப்பின்போதும், பேணுகையிலும் எதிர்பார்க்கின்ற மட்டத்தில் செயலாற்றுவதற்கு மேற்கொள்கின்ற ஏனைய செலவினங்கள் திரண்ட அடிப்படையின் மீது கணக்கு வைக்கப்பட்டு விரிவான வருமானக்கூற்றிற்கு அறவிடப்படும்.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

**குறிப்பு - 4 - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

**குறிப்பு 4.1 - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | 2024.01.01 ஆம் திகதியில் மீதி | முந்தைய ஆண்டு சரிசெய்தல் | சேர்த்தல் | மீள்கணிப்பீடு | அகற்றல் ∴ பிறமாற்றங்கள் | 2024.12.31 ஆம் திகதியில் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செலவினம் ∴ மதிப்பீடு** | | | | | | |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1 | 247,925,000 | | - | - | - | 247,925,000 |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3) | 1,224,899,997 | | - | 303,480,000 | (780,599,997) | 747,780,000 |
| தகவல் தொழில்நுட்ப உபகணரங்கள் | 131,622,789 | | 76,849,756 | - | - | 208,472,546 |
| தளவாடங்கள் மற்றும் கருவிகள் | 30,361,194 | | 262,432 | - | - | 30,623,626 |
| மருத்துவ உபகரணங்கள் | 206,442,488 | | 62,164,275 | - | - | 268,606,763 |
| மென்பொருள் | 29,149,008 | (6,601,851) | - | - | - | 22,547,156 |
| கருவிகள் | 7,908,459 | | 1,060,890 | - | - | 8,969,349 |
| அலுவலக உபகணரங்கள் | 11,915,952 | | 7,653,085 | - | - | 19,569,037 |
| வேலை நடந்து கொண்டிருக்கிறது - IT மென்பொருள் | - | 6,601,851 | - | - | - | 6,601,851 |
| | 1,890,224,887 | - | 147,990,438 | 303,480,000 | (780,599,997) | 1,561,095,328 |

| | 2024.01.01 ஆம் திகதியில் மீதி | முந்தைய ஆண்டு சரிசெய்தல் | ஆண்டுக்கான கட்டணம் | தள்ளுபடி | அகற்றல்கள் | 2024.12.31 ஆம் திகதியில் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செலவினம் ∴மதிப்பீடுகள் மீது தேய்மானம்** | | | | | | |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1 | 51,767,336 | | 41,413,869 | - | - | 93,181,205 |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3) | 730,534,570 | | 176,517,871 | - | (780,599,997) | 126,452,444 |
| தகவல் தொழில்நுட்ப உபகணரங்கள் | 113,535,040 | | 24,925,502 | | | 138,460,542 |
| தளவாடங்கள் மற்றும் கருவிகள் | 25,133,512 | | 2,657,266 | | | 27,790,778 |
| மருத்துவ உபகரணங்கள் | 120,124,034 | 1,745,154 | 27,984,162 | - | - | 149,853,349 |
| மென்பொருள் | 21,831,644 | | 512,239 | | | 22,343,883 |
| கருவிகள் | 6,761,479 | | 869,520 | | | 7,630,999 |
| அலுவலக உபகணரங்கள் | 7,871,104 | 41,322 | 2,308,213 | | | 10,220,638 |
| வேலை நடந்து கொண்டிருக்கிறது - IT மென்பொருள் | - | - | - | - | - | |
| | 1,077,558,719 | 1,786,475 | 277,188,642 | - | (780,599,997) | 575,933,838 |

| | 2024.12.31 ஆம் திகதியில் மீதி | 2023.12.31 ஆம் திகதியில் மீதி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **செலவினம்/மதிப்பீடுகளின் மீது சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதி** | | |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம் 1) | 154,743,795 | 196,157,664 |
| மோட்டார் வாகனங்கள் (நோயாளர் வண்டிகள்-கட்டம்2 மற்றும்3) | 621,327,556 | 494,365,427 |
| தகவல் தொழில்நுட்ப உபகணரங்கள் | 70,012,004 | 18,087,750 |
| தளவாடங்கள் மற்றும் கருவிகள் | 2,832,848 | 5,227,682 |
| மருத்துவ உபகரணங்கள் | 118,753,414 | 86,318,453 |
| மென்பொருள் | 203,273 | 7,317,364 |
| கருவிகள் | 1,338,349 | 1,146,979 |
| அலுவலக உபகணரங்கள் | 9,348,399 | 4,044,849 |
| வேலை நடந்து கொண்டிருக்கிறது - IT மென்பொருள் | 6,601,851 | - |
| | 985,161,489 | 812,666,169 |

**குறிப்பு 4.2 - மோட்டார் வாகனங்களைச் சேர்த்தல்**

ஏற்கனவே உள்ள பயன்பாட்டு அடிப்படையில் திறந்த சந்தை மதிப்பில் ஒரு சுயாதீனமான தொழில்முறை மதிப்பீட்டாளரான Care Drive Chartered Valuation & Consultancy (Pvt.) நிறுவனத்தால் கட்டம் 2 மோட்டார் வாகனங்கள் (ஆம்புலன்ஸ்கள்) அக்டோபர் 31, 2024 அன்று மறுமதிப்பீடு செய்யப்பட்டன. திறந்த சந்தை மதிப்பு முறை ஒரே மாதிரியான அல்லது ஒப்பிடக்கூடிய சொத்துக்கள், பொறுப்புகளை உள்ளடக்கிய சந்தை பரிவர்த்தனைகளால் உருவாக்கப்பட்ட விலைகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களைப் பயன்படுத்துகிறது.

| | கட்டம் | கட்டம் | கட்டம் |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்களின் மதிப்பு 31/12/2024 | 247,925,000 | 780,599,997 | 444,300,000 |
| மறுமதிப்பீட்டில் இருந்து பெறப்பட்ட மதிப்பு | - | 303,480,000 | - |
| மோட்டார் வாகனங்களின் மதிப்பு 31/12/2024 | 247,925,000 | 303,480,000 | 444,300,000 |

**குறிப்பு 4.3 - சொத்து, பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான முந்தைய ஆண்டு சரிசெய்தல்கள்**

மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான தேய்மானக் கணக்கீடுகளில் தொழில்நுட்பப் பிழைகள் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, தற்போதைய காலகட்டத்தில் இந்தப் பிழைகளைச் சரிசெய்ய முந்தைய ஆண்டு சரிசெய்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

| | 2022 | 2023 |
|---|---|---|
| மருத்துவ உபகரணங்களுக்கான தேய்மானக் கட்டணம் | 163,401 | 1,581,753 |
| அலுவலக உபகரணங்களுக்கான தேய்மானக் கட்டணம் | - | 41,322 |
| | 163,401 | 1,623,075 |

வீழ்ச்சி கண்டறிதல் அமைப்பின் மதிப்பு, வேலை நடந்து கொண்டிருக்கிறது - IT

**நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்புடையதாகும்)**

| | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **குறிப்பு 5 - பொருட் பதிவேடு** | | |
| மருந்துகள், மற்றும் மருத்துவ நுகர்வுப் பொருட்கள் - (குறிப்பு) (அ) | 101,466,959 | 132,667,405 |
| எழுதுகருவி பொருட்கள் மற்றும் துப்பரவேற்பாட்டு பொருட்கள் | 40,506,659 | 5,128,319 |
| மின் பிறப்பாக்கிக்கான டீசல் பங்கு | 505,250 | - |
| | 142,478,868 | 137,795,724 |

**குறிப்பு (அ) :** பெறுமதி, நாடு பூராகவும் விநியோகிக்கப்படுகின்ற 322 நோயாளர் வண்டிகளுக்காக மருந்து, மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏற்புடைய பொருட்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ரூபா. 7,674,108 பெறுமதியான நுகர்வு பொருட்கள் இதற்குள் அடங்குகின்றது.

| | 2024.12.31 | 2023.12.31 |
|---|---|---|
| **குறிப்பு 6 - முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள்** | | |
| பாதுகாப்பு வைப்புகள் | 11,832,000 | 9,872,250 |
| முற்பணம் (குறிப்பு ) (ஆ) | 20,000 | 23,915 |
| முன்செலுத்தல்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய தொகை | 81,386,911 | 23,538,172 |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள் (குறிப்பு 6.1) | 330,091,526 | 330,091,526 |
| | 423,330,438 | 363,525,864 |
| **குறிப்பு 6.1- இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள்** | | |
| ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 330,091,526 | 330,091,526 |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி | - | - |
| இந்திய அரசாங்கத்தின் அளிப்புகள் - வரையறுக்கப்பட்ட நிதியத்திடம் மாற்றப்பட்ட (குறிப்பு 9) | - | - |
| திறைசேரியிடம் ஒப்படைக்கபட்டுள்ளது , ஆனால் இவ்வருடத்தில் பெறப்படவில்லை (நன்கொடை நிதிகள்) | 22,500,000 | |
| ஆண்டு இறுதியில் மீதி | 352,591,526 | 330,091,526 |
| **குறிப்பு 7 - காசும் காசுக்கு சமமானவைகளும்** | | |
| இலங்கை வங்கி - இல.ரூபா கணக்குகள் | 558,748,820 | 410,629,564 |
| இலங்கை வங்கி அ.டொலர் கணக்கு | 540,722,334 | 599,328,713 |
| | 1,099,471,153 | 1,009,958,277 |
| **குறிப்பு 8 பெயரிடப்பட்ட ஒதுக்கங்கள் - மூலதனம் இந்திய அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெறுகின்ற மானியங்கள்** | | |
| ஆண்டு ஆரம்பத்தில் மீதி | 176,627,794 | 366,170,755 |
| வரையறுக்கப்பட்ட நிதியத்தால் மாற்றம் செய்யப்பட்ட - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு 09) | - | - |
| சொத்தக்களின் அகற்றலின் போது ஒதுக்கத்தின் - காசாக்கல் (குறிப்பு 18) | - | - |
| மீள்கணிப்பீடு செய்தலின் மீது காசாக்கப்படாத ஒதுக்கம் (குறிப்பு 11) | - | - |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | (121,194,577) | (189,542,961) |
| ஆண்டு இறுதியின் மீதி | 55,433,217 | 176,627,794 |

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்பு)

| | 2024.12.31<br>ரூபா | 2023.12.31<br>ரூபா |
|---|---|---|
| **குறிப்பு 9 - வரையறுக்கப்பட்ட நிதியம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள்** | | |
| ஆண்டு ஆரம்பத்தின் மீதி | 667,751,138 | 679,434,218 |
| ஆண்டில் ஏனைய மாற்றங்கள் | - | - |
| ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி இந்திய - மானியம் (குறிப்பு ஊ) | - | - |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவைகள் மாற்றப்பட்டுள்ளன. (குறிப்பு 6.1) | - | - |
| பெயரிடப்பட்ட ஒதுக்கங்களிடமிருந்து மாற்றப்பட்ட மூலதனம் - இந்திய அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு - 8) | - | - |
| விரிவான வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டுள்ள (குறிப்பு 15) | - | (126,116,537) |
| ஆண்டு இறுதியின் மீதி | 667,751,138 | 553,317,681 |
| **குறிப்பு 10 - பெயரிடப்பட்ட ஒதுக்கம் - மூலதனம் - இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மானியங்கள்** | | |
| ஆண்டு ஆரம்பத்தின் மீதி | 453,880,115 | 418,940,000 |
| நன்கொடையாக கிடைக்கப்பெற்ற நோயாளர் வண்டிகளை சேர்க்கப்படுதல் | - | - |
| வரையறுக்கப்பட்ட நிதியத்திலிருந்து மாற்றப்படுகின்ற - புதிய நோயாளர் வண்டிகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் மூலதன மானியங்கள் (குறிப்பு 14) | 144,387,494 | 69,003,115 |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | (102,585,132) | (34,063,000) |
| தேய்மானத்திற்கான முந்தைய ஆண்டு சரிசெய்தல் | (2,750,436) | - |
| அமைச்சு வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்கள் | 9,592,643 | - |
| ஆண்டு இறுதியின் மீதி) | 502,524,685 | 453,880,115 |
| **குறிப்பு 11 - மீள்கணிப்பீட்டு ஒதுக்கம்** | | |
| ஆண்டு ஆரம்பத்தின் மீதி | 247,925,000 | 247,925,000 |
| மோட்டார் வாகனங்களின் மிகை மீள்கணிப்பீடு | - | - |
| மீள்கணிப்பீடு மீது காசாக்கப்படாத ஒதுக்கம் (குறிப்பு இ) | - | - |
| மோட்டார் வாகனங்களின் மறுமதிப்பீடு உபரி | 303,480,000 | |
| ஆண்டு இறுதியின் மீதி | 551,405,000 | 247,925,000 |
| **குறிப்பு 12 - நியமிக்கப்பட்ட இருப்புக்கள் - நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியம்** | | |
| ஆண்டு ஆரம்பத்தின் மீதி | 29,085,500 | - |
| நன்கொடையாளர்களிடமிருந்து நிதிக்கு சேர்க்கப்பட்ட தொகை | 10,554,208 | 29,085,500 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம் | (3,255,369) | - |
| தேய்மானத்திற்கான முந்தைய ஆண்டு சரிசெய்தல் | (13,813) | - |
| | - | |
| ஆண்டு இறுதியின் மீதி | 36,370,525 | 29,085,500 |
| **குறிப்பு 13 - ஊழியர் நலன்கள்** | | |
| ஆண்டு ஆரமப்த்தின் மீதி | 128,622,431 | 111,899,625 |
| விரிவான வருமானக் கூற்றில் அடையளாம் காணப்பட்ட செலவினம் | 22,044,500 | 22,671,250 |
| ஆண்டில் மேற்கொண்ட செலவினம் | (5,855,125) | (5,948,444) |
| ஆண்டு இறுதியின் மீதி | 144,811,806 | 128,622,431 |
| **குறிப்பு 14 - ஏனைய செலுத்தப்பட வேண்டிய** | | |
| நியதிச்சட்ட கணக்காய்வு கட்டணம் | 200,000 | 200,000 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,609,446 | 1,315,396 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 10,729,642 | 8,769,307 |
| செலுத்தப்பட வேண்டிய மென்பொருள் கட்டணம் | - | - |
| திரண்ட செலவினம் | 19,586,812 | 11,700,345 |
| செலுத்தப்பட வேண்டிய ஏனைய வழங்குநர்கள் மற்றும் கடன் கொடுநர்கள் | 8,461,960 | 41,475,508 |
| | 40,587,860 | 63,460,556 |
| **குறிப்பு 15 - வரையறுக்கப்பட்ட நிதி - புதிய நோயாளர் வண்டிகளுக்கான இலங்கை அரசாங்கத்தின் மூலதன மானியங்கள்** | | |
| ஆண்டு ஆரம்பத்தின் மீதி | 102,806,885 | 124,810,000 |
| புதிய 25 நோயாளர் வண்டிகளை மீள்ஒழுங்கமைப்பதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் என்பவற்றுக்கு கிடைத்துள்ள நிதி | 122,000,000 | 47,000,000 |
| பெயரிடப்பட்ட ஒதுக்கங்களிடம் மாற்றப்பட்ட மூலதனம் - இலங்கை அரசாங்கத்தின் மானியங்கள் (குறிப்பு 10) | (144,387,494) | (69,003,115) |
| ஆண்டு இறுதியின் மீதி | 80,419,391 | 102,806,885 |

